## ஆரம்பப்பாடசாலைக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கான வீட்டுப்பாட அறிவுறுத்தல்

சுவிஸ்நாட்டில் வீட்டுப்பாடம் என்பது நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதாகும். வீட்டுப்பாடத்தின் ஊடாக பாடசாலையில் கற்றவை மீள்மீட்கப்படுவதுடன் ஆழப்படுத்தப்படவேண்டும். பிள்ளைகள் சில வேலைகளை சுயமாக நிறைவுசெய்வர். அதேநேரத்தில் பெற்றோராக உங்களுக்கு உங்கள் பிள்ளை பாடசாலையில் என்ன செய்கின்றது என்பதை அறியும் பார்வை கிட்டும்.

வீட்டுப்பாடம் என்பவை, பிள்ளைகள் நிறைவுசெய்யவேண்டிய கடமையாகும். பெற்றோர்கள் தம் பிள்ளைகள் வீட்டுப்பாடத்தினை நிறைவு செய்வதை, உறுதிப்படுத்த வேண்டும். இதற்குப் பாடசாலைகள் பெற்றோர்களுக்கு உதவிகளை முன்வைக்கும்.

## எப்படி உங்கள் பிள்ளை சிறப்பாக கற்கமுடியும்?

- **கற்கும் இடம்:** இது அமைதியாகவும், ஒழுங்குபடுத்தியும் இருத்தல் வேண்டும். தொலைக்காட்சி மற்றும் கைத்தொலைபேசி நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- **வழமையான கற்கைநேரம்:** கற்கைநேரம் எப்போதும் தெளிவாக நாளாந்த நிரலில் திட்டமிடப்பட்டிருக்கவேண்டும், எ.கா: மாலைச்சிற்றுண்டிக்குப் பின்னர்.
- **தொலைக்காட்சி, கணனி, கைத்தொலைபேசி**: வீட்டுப்பாடத்தின் முன்னுக்கும் பின்னரும் (30 நிமிடம் காத்ததிருக்க வேண்டும்) பயன்படுத்தவேண்டாம். கற்றவற்றை பதிவுசெய்ய, மூளைக்கு கால அவகாசம் தேவை.
- அசைவு, ஆரோக்கிய உணவு மற்றும் இடைவேளை என்பன வெற்றிகரமான கற்றலிற்கு உதவும்.

மீள்மீட்டல்கள் கற்றதை தக்கவைக்க முக்கியமாகின்றது. சரியான மீள்மீட்டல்கள் என்பது:
- 20 நிமிடங்களுக்கு பின்னர்
- அதே நாளில்
- ஒரு நாளின் பின்னர்
- மூன்று நாட்களின் பின்னர்
- ஒரு வாரத்தின் பின்னர்
- ஒரு மாதத்தின் பின்னர்

### சுயமாகக் கற்பதற்கான மதியுரை

குழந்தைகள் தமது தனித்தன்மை மற்றும் வயதிற்கேற்ப கற்பதில் வேறுபடுவர். அவர்களுக்கு அதிகமாக அல்லது குறைவாக பெற்றுறோரின் உதிவி தேவைப்படும். கற்பதில் சிக்கல் உள்ள பிள்ளைகளுக்கு சிறப்பு வழித்துணை தேவைப்படும்.

### இவ்வாறு பெற்றோர்கள் உதவமுடியும்

- நீங்கள் வீட்டுப்பாடம் தொடர்பில் ஆர்வம் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளை ஊடாக வீட்டுப்பாடத்தினை விளங்கிக்கொள்ளுங்கள். நீங்கள் அதிக கேள்விகளை ஒரேநேரத்தில் முன்வைக்காதீர். பதில் அளிப்பதற்கு நேரம் அளியுங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு நீங்கள் **அங்கு** இருங்கள். உங்கள் பிள்ளை உதவி கோரினால் மட்டும், நீங்கள் உதவுங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு அருகில் நீங்கள் இருக்காதீர்கள்.
- உங்கள் பிள்ளை வீட்டுப்பாடத்தை சுயமாகச் செய்யட்டும்.
- வீட்டுப்பாடத்தை உங்கள் பிள்ளை கேட்டால் மட்டும், நீங்கள் சரி பாருங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு வீட்டுப்பாடம் சரியாகப் புரிந்ததா? எது சரியான நோக்கம்? உங்கள் பிள்ளை எதனை செய்யத்தக்கதாக இருக்கவேண்டும்?
- **உதவிப்பொருட்கள்:** வீட்டுப்பாடத்தினை நிறைவுசெய்ய, எவ்வகை விளக்கஆவணங்கள் உங்கள் பிள்ளைக்கு தேவை? எவ்வகை உதவிப்பொருட்கள், விளக்க ஆவணங்கள் மேலும் பெறப்படவேண்டும்?
- **திட்டமிடல்:** உங்கள் பிள்ளைகள் எப்படி **நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டு** இலகுவாக நோக்கத்தை அடையலாம் என்பதற்கு, நீங்கள் ஆதாரக் குறிப்புக்களை குறித்துக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையினை

உங்கள் பிள்ளையால் சுயமாக வீட்டுப் பாடத்தினை செய்ய முடியாவிடின், அதனை கேள்விகளுடன் ஆசிரியரிடம் அனுப்பி வையுங்கள். தேவைப்படின் ஆசிரியரிற்கு தகவல் அளியுங்கள் (தொலைபேசி, தொடர்பாடலிதழ், மின்னஞ்சல் அல்லது குறுங்கடிதம்).

ஓர் வீட்டுப்பாட நிரல் அமைக்கச் செய்யுங்கள். உங்கள் பிள்ளை எந் நிரலில்படி, எந் நேரத்திற்கு தன் வீட்டுப்பாடத்தினை செய்யப்போகின்றது என, திட்டமிடுவதற்கு உதவுங்கள். வழங்க வேண்டிய காலத்தவணைக்கேற்ப வீட்டுப்பாடங்களை ஒழுங்குபடுத்துவதற்கு, தேவை இருப்பின் நீங்கள் உதவுங்கள். **தேர்விற்கு கற்பதற்கு நேரங்கள் மீள்மீட்டலிற்கு தேவைப்படும்: முன்கூட்டியே தொடங்குங்கள்!**

- **எவர் உதவமுடியும்:** சிலவேளைகளில் வயதிற்கு மூத்த சகோதரத்தால் வீட்டுப்பாடம் செய்வதற்கு உதவமுடியும்? பாடசாலையின் வழங்கல்களை மற்றும் - பராமரிப்பினைப் பயன்படுத்துங்கள். முன்னேற்றம் இல்லாவிடின், உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் தொடர்புகொள்ளுங்கள்.

**பாடசாலை முக்கியம் ஆகும்! இதனை உங்கள் ஆர்வத்தால் பிள்ளைக்கு வெளிக்காட்டுங்கள்**

- உங்கள் பிள்ளை பாடசாலையில் என்ன செய்கிறது என்பதில், உங்கள் **ஆர்வத்தைக்** காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு நீங்கள் அங்கு இருங்கள்
- உங்கள் பிள்ளையால் ஏதேனும் வெற்றிகொள்ளும்போது, உங்கள் **மகிழ்ச்சியை** வெளிக்காட்டுங்கள்.
- முதல்முயற்சியில் உங்கள் பிள்ளையால் ஏதேனும் முடியாமல் போனால், அதனை அப்படியே கைவிடாது தொடர்வதற்கு நீங்கள் **ஊக்கம்** அளியுங்கள்.
- உங்கள் பிள்ளை வெற்றிகளைத் தவறவிடும்போது அதனை **தேற்றுங்கள்** அத்துடன் அடுத்த முறைக்கு முயல துணிவு வழங்குங்கள்.
- மதிப்புப்புள்ளி அல்லது பெறுபேற்றினைக்காட்டிலும் பிள்ளையின் செயற்பாட்டிற்கு அதிக **பாராட்டுக்களை** வழங்குங்கள்.

**உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் தொடர்புகளைப் பேணுங்கள்**

உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் உள்ள தொடர்புகளை பயன்படுத்துங்கள். ஒரு குறுகிய தொடர்பு நம்பிக்கையினை வளர்க்கும்.

- **தொலைபேசி:** வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் அல்லது பின்னர் பாடசாலைக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்துங்கள்.
- **தொடர்பாடலிதழ், கடிதம், குறிப்பு:** ஏதேனும் விடயம் இருப்பின், உங்கள் பிள்ளையின் ஆசிரியரிற்கு நீங்கள் எழுதுங்கள். ஓர் உரையாடலை கோருங்கள்.
- **பார்வையிடும்நாள்:** உங்கள் பிள்ளையின் வகுப்பினை நீங்கள் அனுபவரீதியாக உணரவும் மற்றும் புரியவும், வாய்ப்பிற்கேற்ப பாடசாலைக்குச் சென்று பாருங்கள்.
- **பெற்றோர்நிகழ்வுகள்:** பெற்றோர்களுக்கான நிகழ்வுகளில் பங்கெடுத்துக்கொள்ளுங்கள் அத்துடன் உங்கள் ஆர்வத்தை வெளிக்காட்டுங்கள்.
- **நேரத்தவணை:** உங்கள் பிள்ளையின் செயல்திறன் தொடர்பாகவும் அத்துடன் உங்கள் விடயங்கள் தொடர்பாக உரையாடுவதற்கும் ஆசிரியரிடம் கேட்டு ஒரு சந்திப்புநேரத் தவணையினை பெற்றுக்கொள்ளுங்கள்.

**மேலதிக தகவல்கள்:**

www.elternwissen.ch, www.sveo.ch, www.schule-elternhaus.ch




கற்றல் மற்றும் தன்முனைப்பு ஆற்றல் தொடர்பான பாப்பியான் குறோலிமுண்ட் (Fabian Grolimund) அவர்களின் படங்கள். வீட்டுப்பாடங்கள் யூருப்பிலும் (Youtube) www.fritzundfraenzi.ch ம்.

இவ் அறிவுறுத்தல் பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு தரவிறக்கம் செய்வதற்கு தயாரக உள்ளன: www.elternwissen.ch/hausaufgaben. இதனை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கியோர்:

Schule und Elternhaus Schweiz
பாடசாலை மற்றும் பெற்றோர் இல்லம் சுவிஸ்

SVEO
SCHWEIZERISCHE VEREINIGUNG DER ELTERNORGANISATIONEN
ஒருங்கிணைந்த சுவிஸ் பெற்றோர் அமைப்புக்கள்

செப்ரெம்பர் 2013


Elternbildung CH
Formation des Parents CH
Formazione dei Genitori CH
Steinwiesstrasse 2, 8032 Zürich, Tel. 044 253 60 60, Fax 044 253 60 66
info@elternbildung.ch, www.elternbildung.ch